


கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம் கஞ்சம்பட்டி ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.50 இலட்சம் மதிப்பிலும், அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதலாக ஆறு வகுப்பறை கட்டிடங்கள் ரூ.23 இலட்சம் மதிப்பிலும் கட்டும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார். அருகில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, சார் ஆட்சியர் செல்வி. கேத்தரின் சரண்யா, வட்டாட்சியர் வேல்முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர் ஜென்கின்ஸ், மோன்பாபு, உள்ளிட்ட பலர் உள்ளனர்.



திராவிட முன்னேற்றக் கழக தகவல் தொழில்நுட்ப அணியின் கோவை மண்டலத்துக்குட்பட்ட மாவட்ட தொகுதி ஒன்றிய ,பகுதி ,நகர ,பேரூர் கழக நிர்வாகிகளின் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம், கோவை முதலிபாளையம் எம்.என்.சி.ஆர். கிராண்ட் பேலஸ் அரங்கில் நடைபெற்றது. ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தொழில்துறை அமைச்சர்; கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர். இந்நிகழ்வில் கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன்,தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கோவி.லெனின், தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் மகேந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, இளைஞரணி துணைச் செயலாளர் இ.பிரகாஷ் எம்.பி., தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் நல்லசிவம், கோவை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### பேராசிரியரின் உதவியோடு

# அண்ணா பல்கலைக்கழக மாணவியின் புகார்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் விளக்க அறிக்கை!

சென்னை,டிச.29-

அண்ணா பல்கலைக்கழக மாணவியின் புகார் பெறப்பட்டது குறித்து உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் விளக்கமளித்தார்.

இது குறித்து அமைச்சர் கோவி. செழியன் விளக்க அறிக்கை வருமாறு:

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த குற்றம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவி காவல்துறை அவசர உதவி எண் 100 க்கு நேரடியாக தொடர்பு கொண்டு புகார் அளித்தார்.

அதன் அடிப்படையில் விசாரணை நடத்த வந்த காவல்துறையினரிடம்



அண்ணா பல்கலைக்கழகத்தின் POSH - Prevention of Sexual Harrasment Committee) உள் விசாரணை குழுவினைச் சேர்ந்த ஒரு பேராசிரியரின் உதவியோடு பாதிக்கப்பட்ட பெண் நடந்த விவரங்களை சொல்லி புகார் அளித்திருந்தார்.

காவல்துறையினர் பல்கலைக்கழகத்திற்கு வந்து விசாரணை செய்யும் போதுதான் இந்த சம்பவம் தொடர்பாக POSH குழுவில் இருந்த மற்றவர்களுக்கு இந்த பிரச்சனை தெரியவந்துள்ளது. அதை வைத்துதான் POSH குழு நேரடியாக புகார் அளிக்கவில்லை என தெரிவித்திருந்தேன். அது தவறான பொருள்படும்படி அமைந்துவிட்டது.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தெரிவிதுள்ளார்.

### டி.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை! இரா. தாமரைச்செல்வன் – என். மருது கணேஷ் முன்னிலை!

# கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு, தருமபுரி கிழக்கு, மேற்கு, மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## தளி ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. – பி.பழனியப்பன் – தடங்கம் சுப்பிரமணி சிறப்புரை!

கிருஷ்ணகிரி, டிச. 29-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி யார் அவர்களின் உத்திரவின் படியும், துணை முதலமைச்சர் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ எம்.பி ஆகியோரின் ஆலோசனை படியும் கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு ஆகிய மாவட்டங்களின் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம் 29.12.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 03.00 மணிக்கு , கிருஷ்ணகிரி புது பேருந்து நிலையம் அருகில் உள்ள ஆர்.கே.வி ஹோட்டலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் டி.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

வழக்கறிஞர் அணி மண்டல பொறுப்பாளர்கள் சட்டத்துறை இணைச் செயலாளர் இரா. தாமரைச்செல்வன் Ex.M.P சட்டத்துறை துணைச் செயலாளர் என். மருது கணேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் மாவட்ட அமைப்பாளர்கள் ஈ.வெங்கடேஷ் ராஜா (கிருஷ்ணகிரி கிழக்கு ) ஆர். திம்மராயப்பன் (கிருஷ்ணகிரி மேற்கு), டி. சந்திரசேகர் (தர்மபுரி கிழக்கு), ஆர். சிவம் ( தர்மபுரி மேற்கு) ஆகியோர் வரவேற்பில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் தளி ஒய்.பிரகாஷ் (கிருஷ்ணகிரி மேற்கு), பி பழனியப்பன் (தர்மபுரி கிழக்கு), தடங்கம் பி. சுப்பிரமணி (தர்மபுரி மேற்கு ) ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்

கூட்டத்தில் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,

ஒசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்

எனவே இக்கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வழக்கறிஞர் அணி மாவட்ட நிர்வாகிகள், மற்றும் முன்னாள் நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கிறோம்

இக்கூட்டத்தில் 1.வருகின்ற ஜனவரி 18ஆம் தேதி சென்னையில் நடைபெற உள்ள சட்டத்துறை மாநாடு குறித்தும்,

2. 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்தும் ஆலோசனை செய்யப்பட வுள்ளது.

### கேரள மாநிலம் வைக்கம் நகரில் இருந்து

# சென்னை, வேளாங்கண்ணிக்கு பேருந்துகள் - அமைச்சர் சிவசங்கர் தொடங்கி வைக்கிறார்!

## மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

திருவனந்தபுரம், டிச. 29-

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டத்தில் வைக்கம் நகரில் தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகம் புதுப்பொலிவுடன் அண்மையில் தமிழக முதல்வர் தலைவர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் திறப்பு விழா நடைபெற்றது அந்த நிகழ்ச்சியில்



கலந்து கொள்ள தமிழக முதல்வர் அவர்கள் வைக்கம் சென்றபோது கோட்டயம் பாராளுமன்ற உறுப்பினர் அளித்த கோரிக்கையை ஏற்று வைக்கம் நகரில் இருந்து சென்னை மற்றும் வேளாங்கண்ணி ஆகிய இரண்டு இடங்களுக்கும் பேருந்துகள் இபக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார் அதனை உடனடியாக பரிசீலனை செய்து வைக்கம் முதல் சென்னை மற்றும் வைக்கம் முதல் வேளாங்கண்ணி ஆகிய இரண்டு இடங்களுக்கும் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுத்து வருகிற ஜனவரி முதல் தேதி முதல் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது.

இந்த நிகழ்ச்சி வைக்கம் நகரில் 1.1.2025 புதன்கிழமை மாலை 5மணியளவில் கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தலைமையில் நடைபெறுகிறது. தமிழக அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் கேரள மாநில திமுக இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ் மாநில திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர் விபின் முருகேசன், ஹரிகுமார் மற்றும் தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாபன், சிற்றார் ரவிச்சந்திரன், துரை பேச்சிமுத்து மாவட்ட கழக செயலாளர்கள் ரெஜிராஜ், போபன். கே.பேபி, அனீஷ், ஜாபர், சஜயன், ரெஜீஸ், நெவின் , பிரின்ஸி அன்னா , இலியாஸ், மன்னன், அஜ்மல் பாபு அன்வர் அப்துல்லா, அபுபக்கர், மஜுஹ், சரீஃப், மாத்யூ ஜான், ரபீக், ஜனார்த்தனன் மற்றும் அனைத்து முன்னணி நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளனர் இந்த நிகழ்ச்சியில் கேரள மாநிலம் முழுவதும் உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணி களைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்துத் தருமாறு கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### நீடாமங்கலம் ஒன்றியம் காளாஞ்சிமேடு

# கழக முன்னோடி கே.ஆர்.கலியபெருமாள் மறைவு!

## பூண்டி கலைவாணன் - ச.முரசொலி - பி.ராஜமாணிக்கம் அஞ்சலி!

திருவாரூர்,டிச.29-

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் ஒன்றியம் காளாஞ்சிமேடு கிராமத்தைச் சேர்ந்த கழக ஒன்றிய துணை செயலாளராக 20 ஆண்டுகால பணியாற்றிய நீடாமங்கலம் ஒன்றிய பகுதியில் கழக வளர்ச்சிக்கு பல்வேறு தியாகங்களை செய்த கழக முன்னோடி கே. ஆர். கலியபெருமாள் (வயது 67)அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக 26122024 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரின் மறைவையொட்டி திருவாரூர் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ, தஞ்சை நாடாளு மன்ற உறுப்பினர் ச.முரசொலி, கழக சட்ட திருத்



தக் குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய பெருந் தலை வர் சோம.செந்தமிழ் செல்வன், மாவட்ட அவை தலைவர் க.தன்ராஜ், மன்னார் குடி நகர் மன்ற தலைவர் த. சோழராஜன், மன்னார்குடி நகர செயலாளர் வீரா.கணேசன், அறங்காவலர் குழு தலைவர் இளவரசன், ஒன்றிய செயலாளர்கள் கேவிகே ஆனந்த், டி.எஸ்.டி.முத்துவேல், ந.கவியரசு, மாவட்ட மகளிர் அணி தலைவர் ராணி சேகர், நீடாமங்கலம் பேரூராட்சி செயலாளர் ஆர்.ராஜசேகரன், முன்னாள் ஒன்றிய செயலாளர் விசு. அண்ணாதுரை, கோபால கிருஷ்ணன் மற்றும் உள்ளாட்சி அமைப்பு தலைவர்கள் ஒன்றிய, நகர, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இறுதியாக சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பி.ராஜமாணிக்கம் தலைமையில் முன்னாள் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சிவா.ராமமூர்த்தி, மறைந்த கே.ஆர். கலியபெருமாள் அவர்களின் படத்தை திறந்து வைத்து வீரவணக்கம் செலுத்தினர்.



கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைகிணங்கவும், கழக இளைஞர்அணி செயலாளர் துணைமுதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர். இளங்கோ அறிவிப்பின் படி தி.மு.க. சட்டத்துறை மத்திய மண்டலம் 2 உள்ளடக்கிய புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட அமைப்பாளர்கள், என். வீரையா, வளர்மதி ஆகியோர் வரவேற்றனர், சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யாநாதன் மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே. செல்லபாண்டி ஆகியோர் தலைமையிலும், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். முத்துராஜ் முன்னிலையில், கழக சட்டத்துறை இணை செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான், தலைமைக் கழக வழக்கறிஞர் நாகை மூ.தினேஷ்குமார் சிறப்புரையாற்ற, வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வ. துரை
### டிசம்பர் 29 (1994)



தனது இளமைக் காலம் முதலே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

முப்பது ஆண்டுகள் தொடர்ந்து திண்டிவனம் நகரக் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளரப் பாடுபட்டவர்.

கழகத்திற்குச் சோதனை வந்தபோது உறுதி குலையாமல் கழகப் பணியாற்றியவர்.

நெருக்கடி காலத்தில் 'மிசா' கைதியாக ஓராண்டு சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த சட்ட நகல் எரிப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு என அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# மரக்காணத்தில் 20ஆம் ஆண்டு சுனாமி நினைவு நாள் அஞ்சலி!

## டாக்டர் ப.சேகர் தலைமையில் கழகத்தினர் மலர் தூவி மரியாதை!

மரக்காணம் டிச 29-

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் சுனாமியின் 20ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சுனாமியில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மரக்காணம் அடுத்த கூனிமேடு கடற்கரையில் உள்ள சுனாமி நினைவிடத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர்தலைமையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் மரக்காணம் ரவிக்குமார், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், பொதுக்குழு உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் சுனாமியில் உயிரிழந்தவர்களுக்கு மலர்தூவி, பால் ஊற்றி மரியாதை செலுத்தினர்.

இதை தொடர்ந்து சுனாமியின் போது உயிரிழந்த கூனிமேடு குப்பத்தைச் சேர்ந்த பிருந்தாவதியின் இல்லத்திற்கு சென்ற மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் அவரது திருவுருவபடத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதில் விழுப்புரம் வடக்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் தங்கராசு, துணை அமைப்பாளர்கள் அன்பரசு, ராஜா,ஊராட்சி மன்ற தலைவர் கஸ்தூரி ஜெயராமன்,ஒன்றிய கவுன்சிலர் தேவி ராஜதுரை ,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வெற்றிவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



நாகப்பட்டினம் மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம், மாவட்ட தி.மு.க. மாவட்டச் செயலாளர் கௌதமன் தலைமையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தினேஷ் வரவேற்றார். மாநில சட்டத்துறை துணை செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான் சிறப்புரை ஆற்றினார். வரும் ஜனவரி 18 அன்று, சென்னையில் நடைபெறும் தி.மு.க. சட்டத்துறை மாநாட்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருந்து திரளாக கலந்து கொள்வது எனவும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் வழக்கறிஞர் அணிக்கு புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது எனவும், 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதி கைப்பற்ற, வழக்கறிஞர் அணி உறுதுணையாக இருக்கும் எனவும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள, மூன்று தொகுதிகளிலும் கட்சி அறிவிக்கும் வேட்பாளர்களை வெற்றி பெற செய்வது எனவும், முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் நாகப்பட்டினம் நகரச் செயலாளர் மாரிமுத்து உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.